நாள் 26.09.2024 STC 20/2020 ம.சா . 1

பெயர் கஜேந்திரன்

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாணை தொடர்ச்சி**

(1) இந்த வழக்கின் சென்ற வழக்கு விசாணையின்போது நான் பேசிக்கெண்டிருந்ததாக சொல்லப்படும் செந்தில்குமார் இன்றும் வந்திருந்தார் அவருடன் நான் பேசிக்கொண்டிருந்தேன் என்றால் இல்லை நான் பார்க்கவில்லை. எதிரியுடன் வேலை செய்யும் ராமகிருஷ்ணன் என்பவருக்கு பணத் தேவை இருந்ததால் உடுமலையில் ஆசிரியராக பணிபுரியும் செந்தில் குமாரை அணுகி ரூ.1 லட்சம் கடனாக கேட்டார் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் செந்தில்குமார் எதிரியிடம் இருந்து ஆதரவிற்காக பொள்ளாச்சி ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா கிளையின் 2 காசோலைகளை பெற்றார் என்றால் தெரியவில்லை. மேற்படி 2 காசோலைகளில் ஒன்றில் கையொப்பத்துடனும், கையொப்பம் இல்லாமல் பெற்றார் என்றால் தெரியவில்லை. கையெழுத்துடன் பெற்ற காசோலையை செந்தில்குமார் தனது நண்பர் பாபு என்பவர் மூலம் உடுமலை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1 ல் STC 171/2019 ன் படி வழக்கு தாக்கல் செய்தார் என்றால் தெரியவில்லை. எதிரியின் கையொப்பம் செய்யாமல் கொடுத்த காசோலையை கொண்டு நானும், செந்தில்குமாரும் மோசடியாக எதிரியின் கையெழுத்தைப் போட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

(2) நான் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு போது செந்தில்குமார் வாங்கிய 2 காசோலைகளில் கையொப்பம் செய்த காசோலையை கொண்டு என் பெயருக்கு பூர்த்தி செய்து தாக்கல் செய்துள்ளதாக எதிரி நினைத்துக்கொண்டு மேற்படி அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு எதிரியின் வழக்கறிஞர் புகார்தாரரின் வழக்கறிஞரிடம் வழக்கின் ஆவணங்களின் நகல்களை பெற்று பார்த்த போது நான் செந்தில்குமாருடன் சேர்ந்து கொண்டு மேற்படி எதிரி மீது கையொப்பம் செய்யப்படாத காசோலையைக் கொண்டு வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரிய வந்தது என்றால் அவ்வாறு எதுவும் தெரியவில்லை. இந்த வழக்கின் காசோலையில் உள்ள எதிரியின் கையொப்பமும், நான் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை

பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டையில் உள்ள எதிரியின் கையொப்பத்திற்கும் வேறுபாடு காணப்படுகிறது என்றால் சரியல்ல இரண்டும் ஒன்று போல் தான் உள்ளது.

(3) காசோலையில் உள்ள எதிரியின் கையொப்பத்தை நானும், செந்தில்குமாரும் மோசடியாக தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் எதிரியுடையது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு காசோலை எந்த சட்டப்படியான கடனை தீர்க்க எனக்கு வழங்கப்பட்ட காசோலை அல்ல என்பதால் இந்த வழக்கை தள்ளுபடி செய்து எதிரியை விடுவிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

ஒப்பம்/–கோ.விஜயகுமார், பி.எஸ்.சி., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்